LIBRARY
04 DEC 2009
Eastern University, Sri Lanka.

# EASTERN UNIVERSITY, SRILANKA.
## FIRST EXAMINATION IN Arts and Culture
## Second Semester -2009
## CC 1201 - INTRODUCTION TO INFORMATION TECHNOLOGY AND COMMUNICATION SKILLS (Theory)

நேரம்: 2 மணித்தியாலங்கள்

## பகுதி - I

பின்வரும் வினாக்களுக்குரிய மிகப் பொருத்தமான விடைக்குரிய எழுத்தினை உமக்கு தரப்பட்டுள்ள விடைத்தாளில் எழுதுக

1 இன்றைய கணினியின் தந்தை என போற்றப்படுபவர்
a. பிளயிஸ் பஸ்கால்
b கோட்பிறட் வில்கெம்
c. சார்லஸ் பாபேஜ்
d. ஹேர்மன் ஹோல்த்ரின்

2 முதலாம், இரண்டாம், மூன்றாம் தலைமுறைக் கணினிகள் முறையே பின்வருவனவற்றால் ஆக்கப்பட்டது.
a. இலத்திரனியல் வால்வு, திரான்சிஸ்டர், ஒருங்கமை சுற்றுக்கள்
b. இலத்திரனியல் வால்வு, ஒருங்கமை சுற்றுக்கள, திரான்சிஸ்டர்
c ஒருங்கமை சுற்றுக்கள, இலத்திரனியல் வால்வு, திரான்சிஸ்டர்
d இலத்திரனியல் வால்வு, ஒருங்கமை சுற்றுக்கள், திரான்சிஸ்டர்

3 பின்வருவனவற்றில் வெளியீட்டுச் சாதனங்களை மட்டும் கொண்ட தொகுதி
a. Mouse, Monitor, Keyboard
b. Scanner, Digital Camera, Printer
c. Printer, Speaker, Plotter
d. Modem, Speaker, Mouse

4 மையச் செயற்படுத் தொகுதி (Central Processing Unit) இன் பிரிவு அல்லாதது
a. ALU – Arithmetic & Logic Unit
b. Storage Unit
c. Control Unit
d. System Unit

5 கணினிப்பொறியின் பாகங்களை ஆள்வது
a. பயன்பாட்டு மென்பொருள்
b. இயக்க முறைமை
c. வெளியீட்டுச் சாதனங்கள்
d. மையச் செயற்படுத் தொகுதி

6 Packet Switching (பொட்டல மாற்றம்) என்பது
a. Network Topology
b. வெளியீட்டுச் சாதனங்களை கையாள்வது
c. பயன்பாட்டு மென்பொருள்
d. இணையத்தில் தகவல் பரிமாற்ற முறை

7 ஒரு இணையத்தை பயன்படுத்த குறைந்தபட்ச தேவைகள்
a. கணினி, தொலைபேசி தொடர்பு, மோடம், அச்சுப்பொறி
b. கணினி, தொலைபேசி தொடர்பு, மோடம், ISP கணக்கு
c. ஒலிபெருக்கி, தொலைபேசி தொடர்பு, மோடம், ISP கணக்கு
d. கணினி, தொலைபேசி தொடர்பு, மோடம், ஒலிபெருக்கி

8 தரவுகளை அல்லது கட்டளைகளை நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ சேமித்து வைக்க பயன்படுத்தப்படும் பகுதி
a. Storage Unit
b. ALU (Arithmetic and Logic Unit)
c. Control Unit
d. Processing Unit


9 பின்வருவனவற்றில் முதன்மை நினைவகம் அல்லாத தொகுதி

a. CD, DVD
b. Register, Cache Memory
c. RAM,ROM
d. RAM, Cache memory

10 மிகவும் பிரசித்தி பெற்ற தேடுபொறி(Search Engine) பின்வருவனவற்றில்

a. http://www.esn.ac.lk
b. http://www.google.lk
c. http://www.learn.ac.lk
d. http://www.esn.org

11 படத்தில் காட்டப்பட்டுள்ள topology இன் வகை



a. Wire Topology
b. Bus Topology
c. Ring Topology
d. Star Topology

12 பின்வருவனவற்றில் கணினி மொழி அல்லாதது

a. Pascal
a. C++
c. Java
c. Notepad

13 இலங்கை கிழக்குப் பல்கலைக் கழகத்தின் இணையத் தள முகவரி

a. http://www.esn.com
b. http://www.easternuniversity.lk
c. http://www.esn.ac.lk
d. http://www.east.ac.lk

14 மின்னஞ்சல் (e-mail) மூலம் அனுப்பக்கூடிய தரவுகளின் வகை

a. Audio
b. Text
c. Video
d. மேலே குறிப்பிட்ட அனைத்தும்

15 கணினி வலையமைப்பின் வகை அல்லாதது

a. Wide Area Network
b. Local Area Network
c. Long Area Network
d. Metropolitan Area Network

16 1 ஜிகா பைட்டிற்கு (Giga byte - GB) சமமான பிட்களின் (bytes) எண்ணிக்கை

a. 1024 bytes
b. 1024x1024x1024 bytes
c. 1024x1024 bytes
d. 1024x1024x8 bytes

17 தனியாள் கணினி (Personal Computer) பின்வரும் எப் பிரிவிலடங்கும்?

a. Mini Computer
b. Micro Computer
c. Mainframe Computer
d. Super Computer

18 கணினி முறைமைச் சூழலின் பிரிவுகளைக் கொண்ட தொகுதி

a. Hardware, Software, Firmware
b. Hardware, Software, Microware
c. Hardware, Freeware, Liveware
d. Hardware, Software, Lightware

19 கூற்று-1:- கணினி இயக்க முறைமை (Operating System) ஆனது கணினிக்கும் அதனை பயன்படுத்துபவருக்கும் இடையில் ஒரு இடைமுகமாக (Interface) தொழிற்படுகிறது.
கூற்று-2:- கணினி இயக்க முறைமை (Operating System) க்கு ஒரு உதாரணமாக Linux ஐ கூறலாம்.

a. கூற்று-1 சரி, கூற்று-2 பிழை
b. கூற்று-1 பிழை, கூற்று-2 சரி
c. கூற்று-1 பிழை , கூற்று-2 பிழை
d. கூற்று-1 சரி, கூற்று-2 சரி

LIBRARY
04 DEC 2009
Eastern University, Sri Lanka.

**20** பின்வருவனவற்றில் பிழையான மின்னஞ்சல் (e-mail) முகவரி

a. banu@yahoo.com
b. kavitha@yahoo.co.uk
c. sajitha@est.ac.uk
d. ranjini.gmail.com

( 2 X 20 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

பகுதி – II இல் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. சகல வினாக்களுக்கும் சமமான புள்ளிகளே வழங்கப்படும்.

Q1.

பின்வருவனவற்றைப் பற்றி சிறு குறிப்பு எழுதுக

1. கணினி தலைமுறைகளும் அவற்றின் முக்கிய கூறுகளும்
2. வன்பொருளுக்கும் மென்பொருளுக்கும் இடையிலான தொடர்பு
3. கணினி உள்ளீட்டு, வெளியீட்டுச் சாதனங்கள்
4. அச்சுப்பொறியும் அதன் வகைகளும்
5. கணினிக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகள்

(15 புள்ளிகள்)

Q2.

1. மையச் செயற்பாட்டுத் தொகுதியின் பல பிரிவுகளையும் விளக்குக.
2. நினைவகங்களைப் பற்றி சுருக்கமாக விபரிக்க.
3. ROM இன் வகைகளைப் பெயரிடுக
4. தட்டச்சு இயந்திரத்தைப் பார்க்கிலும் கணினியை உபயோகிப்பதால் ஏற்படும் நன்மைகளை விபரிக்க
5. தேக்க சாதனங்கள (Storage Devices) பற்றி சுருக்கமாக விபரிக்க.

(15 புள்ளிகள்)

Q3.

1. கணினி வலையமைப்பு (Computer Network) என்பது என்ன?
2. கணினி வலையமைப்பினால் (Computer Network) மனிதன் பெறும் நன்மைகள் பற்றி விபரிக்க.
3. இணைக்கப்படும் கருவிகளுக்கிடையான தூரத்தைக் கருத்தில் கொண்டு கணினி வலையமைப்பின் பிரிவுகளைக் குறிப்பிட்டு எவ்வாறான பௌதீக அமைப்புகளுக்கு அவை உபயோகிக்கப்படுகின்றது என விளக்குக.
4. பின்வரும் எண்களை துவித (Binary) எண்ணாக மாற்றுக.
   a. $95_{10}$
   b. $52_{8}$
   c. $F2_{16}$
5. பின்வரும் எண்களை Decimal எண்களாக மாற்றுக
   a. $10100011_{2}$

b. $3730_8$

c. $CAFE_{16}$

(15 புள்ளிகள்)

Q4.

1. வலையின் இணைப்பு அமைப்பு(Network Topology) இன் பிரதான பிரிவுகளை தருக.
2. கணினி வலையமைபில் இணைப்புக்களாக பயன்படுபவையின் பெயர்களைத் தருக.
3. ஒரு கணினி வலையமைப்பில் அச்சுப்பொறி நிறுவப்பட்டிருந்தால் அதனால் பாவனையாளர் பெறக்கூடிய நன்மைகள் பற்றி ஆராய்க.
4. தகவல் பரிமாற்ற வகையில் அடங்கும் ஒருவழி வகை(Simplex Mode), அரை இருவழி வகை(Half Duplex Mode), முழு இருவழி வகை(Full duplex Mode) என்பனவற்றை விளக்குக.
5. இலத்திரனியல் அஞ்சல் மூலம் எவ்வகையான செய்திகளை அனுப்ப முடியும்?

(15 புள்ளிகள்)